

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்று வரும் சிறப்பு வாக்காளர் சேர்ப்பு முகாமிற்கு நேரில் சென்று, அங்கு மேற்கொள்ளப்பட்ட பணிகளை கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. ஆய்வு செய்தார்.



சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் 296–வது பிறந்த நாளினை முன்னிட்டு, சிவகங்கை மாவட்டம், சூரக்குளம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைந்துள்ள வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் நினைவு மண்டபத்தில், வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் திருவுருவச்சிலைக்கு அரசின் சார்பில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் 3.1.2026 அன்று மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கப்பாண்டியன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி உட்பட பலர் உள்ளனர்.

### திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமை! வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ முன்னிலை!

## திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்கப் பொதுக் கூட்டம்!

### அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் – திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரை!

திருவள்ளூர், ஜன. 05;-

திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்கப் பொதுக் கூட்டம் திருவள்ளூரில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்எல்ஏ தலைமை தாங்கினார். தலைமை செயற்குழு உறுப்பினரும் சட்ட மன்ற உறுப்பினருமான வி.ஜி. ராஜேந்திரன முன்னிலை வகித்தார். நகர செயலாளர், சி.சு.ரவிச்சந்திரன், நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன் நகர நிர்வாகிகள் தி.ஆ.கமலக்கண்ணன், டி.எம்.ரவி, ராஜேஷ்வரி கைலாசம், எம். பரசுராமன், எஸ்.டி.எம்.சம்பத் ராஜ், இ.குப்பன், டி.என்.சீனிவாசன், டி.சிவாக்குமார் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர்.



இந்த கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி.சா.மு. நாசர், கொள்கை பரப்புச் செயலாளரும், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவருமான திண்டுக்கல் ஐ.லியோனி, ஆகியோர் கலந்துக் கொண்டு திராவிட மாடல் அரசின் சாதனை சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினர்.

அப்பொழுது பேசிய லியோனி பேசியதாவது, கும்மிடிப்பூண்டியில் எடப்பாடி பழனிச்சாமி பரப்புரையில் தமது கட்சி மாவட்ட செயலாளர் மயக்கம் போட்டு விழும் வகையிலும், பொய் சொல்லிட்டு சென்றுள்ளார். வரும் சட்டமன்ற தேர்தலில் எடப்பாடி பழனிச்சாமிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஓய்வூதியம் கொடுத்து வீட்டில் அமர வைக்கப் போகிறார். அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஒன்றிய அரக்கு நிகராக ஊதியம் கொடுத்தவர் முன்னாள் முதல்வர் கருணாநிதி. அதிமுக ஆட்சியில் போராட்டத்தில் ஈடுபட்ட 5, ஆயிரம் ஆசிரியர்கள் மீது வழக்கு போட்டு வீட்டிற்கு அனுப்பி வைத்தவர் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா. மேலும் செல்லூர் ராஜு, தமிழ்நாடு முதல்வர் மீண்டும் முதல்வராக வேண்டுமென கூறியதால் எடப்பாடி பழனிச்சாமி தலையில் அடித்துக் கொள்கிறார். அதிமுகவை சேர்ந்த செல்லூர்ராஜு, திண்டுக்கல் சீனிவாசன் போன்றவர்கள் சிறப்பாக ஆட்சி செய்யும் முதல்வர் மீண்டும் முதலமைச்சராக வேண்டுமென கூறி வருகின்றனர்.

பாஜக - அதிமுக கூட்டணி என்பது கோழி இறக்கையும் மண்ணாங்கட்டி போல, காற்றடித்து மழை பெய்தால் கோழி இறக்கை பறந்தும் மண்ணாங்கட்டி கரைந்தும் போய் விடும். வரும் 2026 சட்ட மன்ற தேர்தலில் அதிமுக - பாஜக கூட்டணி டெபாசிட் இழக்கும்.100 நாள் வேலை திட்டத்தில் மகாத்மா காந்தி பெயரை எடுத்து விட்டு வாயில் நுழையாத பெயரை வைத்துள்ளனர். இதன் மூலம் காந்தி தியாகத்தை அவர்கள் மறைத்துள்ளனர், 100 நாள் வேலை பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் எடப்பாடி பழனிச்சாமி பாஜகவுக்கு ஜால்ரா போட்டுக் கொண்டுள்ளார். பாஜக சொல்வதை கேட்கும் அடிமை எடப்பாடி பழனிச்சாமியாக உள்ளார். 25 ஆண்டுகளாக ஓய்வூதியம் அளிக்கக்கோரி ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் நடத்திய போராட்டத்தின் விளைவாக அவர்களின் குடும்பத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பால் வார்த்துள்ளார். விலக்கு அளிக்கப்பட்ட அரசு ஊழியர்களுக்கும் கூட கருணை ஓய்வூதியம் அளித்து மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளார். . லயோலா கல்லூரி மாணவர்கள் கருத்து கணிப்பு போல மீண்டும் முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பு ஏற்பார் அதில் எந்த மாறுதலும் கிடையாது. அவரை எதிர்த்திருந்த ஒரு சில விஷயங்களை கூட முதல்வர் தவிடு பொடியாக்கி உள்ளார். கூட்டத்தை காட்டி விஜய் நடத்துகின்ற அரசியல் திமுகவின் திட்டமிட்ட அரசியல் முன்பு எடுபடாது. என பேசினார்

முன்னதாக பேசிய அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சொன்னதையும் சொல்லாதையும் செய்து இந்தியாவில் உள்ள எல்லா மாநில முதல்வர்களுக்கும் முதல்வராக திகழ்பவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒருவர்தான் என்றார்.வரும் தேர்தலிலும் அவர் வெற்றி பெற்று மீண்டும் முதல்வராவது உறுதி என்றார். ஒன்றிய அரக்கு நிகராக ஊதியம் கொடுத்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஒருவர்தான்,ஆனால் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அரசு ஊழியர்களை கைது செய்து சிறையிலடைத்து அவர்களுக்கு பதிலாக புதியவர்களை நியமித்து,எக்ஸ்மா,டெக்ஸ்மா போன்ற சட்டங்களை போட்டு வதைத்தார்.ஆனால் இன்று திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் மு.க.ஸ்டாலின் 20 ஆண்டு காலமாக போராடி வந்த அரசு ஊழியர்களின் பழைய ஓய்வூதிய திட்டத்திற்கு அனுமதி அளித்து உத்தரவிட்டு அவர்களது குடும்பங்களின் வாழ்க்கையில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளார் இவ்வாறு அவர் பேசினார். இதில் தொகுதி பார்வையாளர் மாஸ்டர் சேகர், மாவட்ட அவைத் தலைவர் க.திராவிடபக்தன் மாவட்ட துணை செயலாளர்கள் டாக்டர் வி.சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, சிட்டிபாபு வழக்கறிஞர் எஸ்.கே.ஆதாம், தொண்டரணி பயிற்சியாளர் இ.குருதாஸ், ஒன்றிய செயலாளர்கள் கூளூர் எம்.ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், மோ.ரமேஷ், கே.அரிகிருஷ்ணன், டி.மோதிலால், பிரகாஷ் ஞானஒளி உள்பட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் வட்டக் கழக கிளைக் கழக செயலாளர் கழக மூத்த முன்னோடிகள் உள்பட 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் திரளாக கலந்து கொண்டனர் பலர் கலந்துக் கொண்டனர்.முடிவில் வட்ட செயலாளர் ஜி. வேலாயுதம் நன்றி கூறினார்.

### மடிக்கணினி வழங்கும் திட்டத் தொடக்க விழா!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

### பகுதிச் செயலாளர் என். சந்திரன் எம்.சி. வேண்டுகோள்!

சென்னை, ஜன. 5

ஆலந்தூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர், 12-வது மண்டல குழு தலைவர் என். சந்திரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் 10 லட்சம் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்ட தொடக்க விழா இன்று (5.1.2026 திங்கட்கிழமை) மாலை 3 மணிக்கு நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்க வருகை தரும் முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் கண்டோன்மெண்ட் - பட்ரோடு அண்ணா சிலை அருகில் மாபெரும் வரவேற்பு நிகழ்ச்சி மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெறுகிறது.

எனவே, ஆலந்தூர் தெற்கு பகுதிகுட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள்,மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள்,வட்ட நிர்வாகிகள், பகுதி-வட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், இளைஞரணியினர், மாணவரணியினர், மகளிரணியினர்,பாக முகவர்கள்(BLA-2), கழக தோழர்கள், கட்டாயம் இருவர்ண கழக கொடியுடன் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பான வரவேற்பு வழங்குமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு ஆலந்தூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர், 12-வது மண்டல குழு தலைவர் என். சந்திரன் தெரிவித்துள்ளார்.



திருப்பூர் கிழக்கு மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, சென்னிமலை கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட முருங்கத்தொழுவு ஊராட்சியில், சென்னிமலை கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் சி. பிரபு தலைமையிலும், தலைமை கழகப் பொதுக்குழு உறுப்பினர் சா. மெய்யப்பன் மற்றும் சென்னிமலை கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சதீஷ் (எ) பொ. சுப்பிரமணியம் ஆகியோரது முன்னிலையிலும், பாகம் எண் : 16 – 17 –ல் ” என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்னும் முன்னெடுப்பில் நடைபெற்ற வாக்குச்சாவடி கூட்டத்தில் ஈரோடு கே.இ. பிரகாஷ் எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.



சென்னை வடக்கு மாவட்டம் ராயபுரம் மேற்கு பகுதி 48வது வட்டத்தில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி வாக்காளர் சிறப்பு முகாமில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ., பார்வையிட்டனர். இதில் பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், தொகுதி பொறுப்பாளர் அ.சுபேர்கான், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ந.மனோகரன், விஜயலட்சுமி விஜயகுமார் எம்.சி., கு.ரமேஷ், எம்.கே.இஸ்மாயில், எஸ்.திருஞானம், இ.மதன், எஸ்.ரமேஷ், ஆர்.வி.லட்சுமிவேலு, இரா.பொன்முடி, எஸ்.யுவராஜ், ந.குமார், கோ.நித்யானந்தம், ந.மணிமாறன், என்.அயாத் பாஷா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### “தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்”

## தமிழ்நாடு அரசு அலுவலர்கள் - ஆசிரியர்கள் வாழ்த்திப் பாராட்டும் வகையில் அமைந்திருக்கிறது!

### பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் அறிக்கை!

திருச்சி,ஜன.5-

“தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் “ தமிழ்நாடு அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர் சமூகம் ஆகிய இரு சாராரும் வாழ்த்தி வரவேற்றுப் பாராட்டும் வகையில் அமைந்திருக்கிறது என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் தெரிவித்தார்.



இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் 04.01.2026 ஞாயிற்றுக்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் கூறியதாவது : ஆட்சி இயந்திரம், அரசு அலுவலர்களால் செம்மையாக இயக்கப்படுவதால் தான், நாட்டு மக்கள், பண்பட்ட ஜனநாயக வழித்தடத்தில் அமைதியில் ஆக்கங்கள் உருவாக்க முடிகிறது.

ஆசிரியப் பெருமக்கள், தங்களின் தூய புனிதப் பணிகளால், மக்களின் இதயத்தில் மண்டும் உள் இருளைப் போக்குவதால் தான், பண்பட்ட பாதையில் சமுதாயம் பயணிக்கிறது. இவ்விரு சாரார் சற்றொப்ப 20 ஆண்டு காலமாகக் கோரி வந்த நியாமான கோரிக்கையை ஏற்று, தீர்க்கப்படாமல் தொடர்ந்த சிக்கலைத் தீர்க்கும் உன்னத நோக்கத்தில் திராவிட மாடல் நல்லாட்சி நாயகர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வெளிவந்திருக்கிறது. “ தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் “ தமிழ்நாடு அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர் சமூகம் ஆகிய இரு சாராரும் வாழ்த்தி வரவேற்றுப் பாராட்டும் வகையில் அமைந்திருக்கிறது.இது நாடும் எல்லோரும் வரவேற்றுப் பாராட்டும் உன்னதமான நற்காரியமாகும்.

நீண்ட நாளைய மனக்குமுறலுக்கு முடிவு கட்டி, அரசு அலுவலர்களும் ஆசிரியப் பெருமக்களும் தமது வாழ்க்கைப் பயணத்தைப் புதிய உத்வேகத்துடனும் புதிய நோக்குடனும் தொடர வழிகாட்டியிருக்கிறது. தமிழ்நாடுத்திற்கு நேற்றை விட இன்று நல்லதாகவும், இன்றை விட வருங்காலம் மிகவும் நல்லதாகவும் அமையும் என்பதற்கு இத்தகைய நற்காரியங்கள் நற்சாட்சிகளாகின்றன.

வாழ்க தமிழ்நாடு! வெல்க திராவிட மாடல் நல்லாட்சி, இன்று போல் என்றும் !.

இவ்வாறு பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### 22 ஆண்டுகாலக் கோரிக்கையை நிறைவேற்றிய

## தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்குப் பாராட்டு!

### தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றப் பொதுச் செயலாளர் – நா.சண்முகநாதன் அறிக்கை!

புதுக்கோட்டை, ஜன.5

ஆசிரியர், அரசு ஊழியர்களுக்கு தமிழ்நாடு புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம் அறிவித்த தமிழ்நாடு முதல்வருக்கு தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் சார்பில் அதன் பொதுச் செயலாளர் நா.சண்முகநாதன் பாராட்டு தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் கூறியதாவது:

தமிழ்நாட்டின் ஆசிரியர், அரசு ஊழியர்களின் பிரதான கோரிக்கையான 22 ஆண்டுகளாக தொடர்ந்து போராடி வந்த பங்கேற்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்துவிட்டு பழைய ஓய்வு திட்டத்தை தொடர வேண்டும் என்ற கோரிக்கை தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

22 ஆண்டுகால கோரிக்கைக்கு தீர்வு காணும் வகையில் பழைய ஓய்வு திட்டத்திற்கான அறிவிப்பினை தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது ஒட்டுமொத்த ஆசிரியர்கள் ,அரசு ஊழியர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தேர்தல் அறிக்கையில் சொன்னவாறு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஆசிரியர்கள்,அரசு ஊழியர்களின் வாழ்வாதார கோரிக்கையை நிறைவேற்றி இருக்கிறார்.

இந்த அறிவிப்பானது பணி நிறைவு பெற்ற ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையினை ஏற்படுத்தி உள்ளது.

பணி நிறைவு பெற்றவர்களும் பயன்பெறும் வகையில் கருணைத்தொகைஅறிவித்திருப்பதையும் வரவேற்கிறோம்.

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனையும் அவர்களின் குடும்பத்தின் எதிர் காலத்தையும் மனதில் கொண்டு, தொலைநோக்குப் பார்வையுடனும் நடைமுறை சாத்தியங்களுடனும் கூடிய வகையில், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் 22 ஆண்டு கால கோரிக்கையை நிறைவேற்றி, பழைய ஓய்வூதியத் திட்டத்திற்கு இணையான ஓய்வூதியத்தையும், பணப் பயன்களையும் பெற வழிவகுக்கும் வகையில் செயல்படுத்தப் பட உள்ள இந்த TAPS திட்டத்தினை, அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒருமனதாக வரவேற்கிறோம்.

தன் வாழ்நாளில் ஆசிரியர் அரசு ஊழியர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கிய கலைஞர் அவர்களின் வழியில் தொடர்ந்து ஆசிரியர் அரசு ஊழியர்களின் பாதுகாவலராக தமிழ்நாடு முதல்வர் அவர்கள் இருந்து வருகிறார்.

எனவே உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக தமிழ் இனம் காக்க பாடுபட்டுக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் மாநிலப் பொதுச்செயலாளர் மன்றம் நா.சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

## “அன்னம் தரும் அமுதகரம்” 319 வது நாள்!

### திரு.வி.க.நகர் தெற்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, ஜன.5-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 319 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (04.01.2026), திரு.வி.க நகர் தெற்கு பகுதி: 1) வட்டம் 75 அ, எஸ். எஸ் புரம், 7வது தெரு,



2) வட்டம் 75, பராக்கா சாலை G5 காவல் நிலையம் பின்புறம், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர் பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம்.

தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியாராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, எம்.சாமிகண்ணு, இசட்.ஆசாத், பி.ஜெ.துளசிங்கம், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, எஸ்.தமிழ்செல்வி, எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், டி.சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ், எம்.தமிம், எஸ்.வெங்கடேசன், வி.க.வெங்கடேசன், மீனவரணி பகுதி அமைப்பாளர் தே.ரஞ்சித்குமார், வர்த்தகர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் எஸ். சதீஷ்குமார். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் : சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர். ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக் குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



செம்பாக்கம் வடக்கு பகுதி, 37, 23, 36 ஆகிய வார்டுகளில் அடங்கிய 237, 177, 216 ஆகிய பாகங்களின், என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி பாக செயல்வீரர்கள் கூட்டம் ஆர்.சேகர், ஐ.ஜேக்கப் பிரான்சிஸ், ஆர். அஸ்வின், ஆகியோர் தலைமையில் பகுதிச் செயலாளர் ஏ.கே.கருணாகரன், கே.பூபதி, எஸ்.மன்னாராஜா கண்ணா, ஜெ.வி. சந்திரசேகர், கே.ரமேஷ், டி.கார்த்திக், ஆகியோர் முன்னிலையில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி தொடர்பாகவும், 2026 சட்டமன்றப் பொது தேர்தலில் களப் பணியாற்றுவது குறித்தும் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார்கள். இதில் மகாலட்சுமி கருணாகரன் எம்.சி, என்.கண்ணன் எம்.சி, எச்.பாஸ்கரன், எம்.சார்லஸ், ஆர். ராதாகிருஷ்ணன், எம்.ஐ.டி. எஸ்.விஜய், கே.பிரபு, சி.ஆர்.நரேஷ்குமார், ஏ.சீனிவாசன், டி.ஜெகன், எம்.பாரதி, பி.செல்வி, ஆனந்தன், தினேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.